www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 06

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்

நேரம்:1.30 மணித்தியாலம்

### பகுதி - I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. நாம் தாவரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் உற்பத்தி
    1) மழை 2) நிழல்
    3) உணவுப் பொருட்கள் 4) சுத்தமான வளி

02. வீட்டுத் தோட்டம் செய்கையின் போது நாம் செய்யக் கூடாதது
    1) சேதனப் பசளைகளைப் பாவித்தல் 2) மண்ணைப் பண்படுத்தலும் பராமரித்தலும்
    3) அதிகமாக இரசாயனப் பசளை இடுதல் 4) பயிர்களை மாற்றி மாற்றி பயிரிடல்

03. வீட்டுத் தோட்டம் அமைக்கும் போது நாம் கவனிக்க வேண்டிய விடயம் அல்லாதது
    1) நிழலான இடம் 2) போதிய இடவசதி 3) நீர் 4) பொருத்தமான பயிர்வகை

04. நடுகைப் பொருட்களாக
    1) வித்துக்கள் 2) நாற்றுக்கள்
    3) கிழங்குகள் 4) மேற்கூறிய யாவும் சரி

05. தண்டுத் துண்டங்களை நட்டு வளர்க்கக்கூடிய பயிர்
    1) கோவா 2) தக்காளி 3) கங்கூன் 4) கத்தரி

06. நாம் தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் சேவை
    1) பலகைகள் 2) பழங்கள்
    3) குடிபானங்கள் 4) மண்ணரிப்பிலிருந்து பாதுகாப்பு

07. மூலிகைத் தாவரமாக
    1) சோளம் 2) வெண்டி 3) கத்தரி 4) கற்பூரவள்ளி

08. வீட்டுத் தோட்டம் என்பது,
    1) சிறுகற்கள் 2) கடதாசி 3) வளி 4) யாவும் பிழை

09. நாற்று மேடையில் இட்டு பின்பு நாற்றுக்களைத் தோட்டத்தில் நடக்கூடிய பயிர்
    1) வற்றாளை 2) பாற்கிழங்கு 3) மரவள்ளி 4) கத்தரி

10. விறகுச் சாம்பல் கலந்து இளம் வெயிலில் காயவிட்டுச் சில தினங்களுக்குப் பின் நடக்கூடிய வித்து
    1) தக்காளி வித்து 2) வெண்டி வித்து 3) கத்தரி வித்து 4) மிளகாய் வித்து

11. மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணி
    1) செம்பகம் 2) மண்புழு 3) தேனீ 4) ஓணான்

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!



agaram.lk

12. பயிர் நண்பர்களான பூச்சிகளைக் கவரும் தாவரம்
    1) கற்றாளை 2) கரட் 3) லீக்ஸ் 4) வெங்காயம்

13. பீடைத்தாக்கத்தைக் குறைக்கப் புகையூட்டப் பயன்படும் தாவரப் பகுதி
    1) மரமுந்திரிகையின் மேற்றோல் 2) கமுகு மரத்தின் மேற்றோல்
    3) பனை 4) மாமரம்

14. சுடர்வடிவிலான தாவரமாகக் கொள்ளப்படுவது
    1) சைபிரஸ் 2) மொன்ஸ்டேரா 3) ஸ்பைடர் பிளான்ட் 4) விசேட போகன்விலா

15. கற்கள் மற்றும் உரிமட்டைக்குள் வாழும் பிராணி
    1) பூரான் 2) பச்சோந்தி 3) மண்புழு 4) பிள்ளைப் பூச்சி

16. காகத்தின் எதிரியான பிராணி
    1) கபரகொயா 2) அழுங்கு 3) குயில் 4) பூனை

17. நாம் நாளாந்தம் உண்ணும் உணவுகளில் மரக்கறிகளின் அளவு
    1) 3 - 5 2) 2 - 3 3) 6 - 11 4) 2 - 4

18. [• • •] இக்குறியீட்டினால் காட்டப்படுவது,
    1) சமையலறைச் சுவர் 2) சமையலறை யன்னல்
    3) சமையலறைக் கதவு 4) உணவு சமைக்கும் அலகு

19. மரக்கறியில் காணப்படும் பிரதான போசணை
    1) காபொவைதரேற்று 2) புரதம்
    3) கொழுப்பு 4) விற்றமின்கள்

20. தயாரிக்கப்பட்ட உணவுகளின் மூலம் கிடைக்கும் நன்மை
    1) கொண்டு செல்ல இலகுவானது 2) இலகுவான உணவைத் தயார் செய்யலாம்
    3) களஞ்சியப்படுத்தல் இலகுவானது 4) மேற்கூறிய யாவும் சரி

(1X20=20 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

**பகுதி - II**

(எல்லா வினாக்களுக்கும் விடை தருக.)

01. i) வீட்டுத் தோட்டம் அமைப்பதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) தானியங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) உயர் பாத்தி அமைப்பதால் கிடைக்கும் நன்மைகள் எவை? (2 புள்ளிகள்)

iv) நோய்த்தாக்கத்தையும் பீடைத்தாக்கத்தையும் குறைக்கப் பயன்படுத்தப்படும் தாவரச்சாறுகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

02. i) சட்டகத்துடன் கூடிய உயர் பாத்தி அமைக்கப் பயன்படும் பொருட்கள் எவை? (2 புள்ளிகள்)

ii) உயிருள்ள மூடுபடைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) அலங்கார பூக்கள் கொண்ட தாவரங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) அழகுக்காக வளர்க்கப்படும் தாவரங்களின் பிரதான தொகுதிகளை வகைப்படுத்துக. (2 புள்ளிகள்)

03. i) வீட்டுத் தோட்டத்தில் காணக்கூடிய பிராணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii) எலி, பூனை ஆகிய பிராணிகளின் விசேட நடத்தைகள் இரண்டும் எவை? (2 புள்ளிகள்)

iii) வீட்டுத்தோட்டத்திற்கும் பாடசாலைச் சுற்றாடலுக்கும் உயிரினங்களால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

iv) பிராணிகளின் வருகையைக் கூட்டுவதற்கு வளர்க்கும் பொருத்தமான தாவரம் மூன்றைக் கூறுக. (3 புள்ளிகள்)

agaram.lk

04. i) நாம் உட்கொள்ளும் உணவுகளில் கவனம் செலுத்த வேண்டியதன் காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) விவசாய நிலங்களிலிருந்து அறுவடை செய்யப்படும் உணவுப் பொருட்களின் தரப்பண்புகளில் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

iii) நாம் உண்ணும் நிறையுணவில் இருக்க வேண்டிய போசணைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) புதிய மீனின் இயல்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

05. i) புதிய உணவில் காணப்படும் தரப்பண்புகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை வாங்கும் போது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையில் வேலை செய்யும் போது ஏற்படும் நன்மைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) சமையலறையொன்றில் சமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!

**06. பொருத்தமான சொற்களை இட்டு இடைவெளி நிரப்புக.**

மண்புழு, எபிசியா, தாவரம் மடிதல், மிக்சர் பக்கட், இரசாயனப் பசளைகள், புளூனி, அழுங்கு, இஞ்சி, குயிலும் மரங்கொத்தியும், ஒழுங்கான நீர்ப்பாசனம்.

i) வீட்டுத் தோட்டச் செய்கையின் போது நாம் தவிர்க்க வேண்டியவை இரசாயனப் பூச்சி நாசினி, .................. ஆகும்.

ii) வேர்க்கிழங்கு அல்லது சிழங்குத் துண்டங்கள் மூலம் வளர்க்கக் கூடிய பயிர் ........................ ஆகும்.

iii) பயிர்த்தாவரங்களில் அதிகளவில் காணக்கூடிய நோய் ............................... ஆகும்.

iv) நோய், பீடைகளைக் கட்டுப்படுத்த தேர்ந்தெடுக்கக் கூடிய சுற்றாடல் நேய முறைகளாக ஒழுங்கான களைக்கட்டுப் பாடு, ....................................... என்பனவாகும்.

v) அலங்கார இலைத் தாவரமாக ................................ கொள்ளப்படுகின்றது.

vi) குட்டையான மரங்களில் வாழும் உயிரினம் .............................. ஆகும்.

vii) மண்ணை வளப்படுத்தும் பிராணியை .................................... என்பர்.

viii) எறும்பின் எதிரியாக ............................ கருதப்படுகின்றது.

ix) ஜம்பு நாவல், கொய்யா போன்ற தாவரங்களை வளர்ப்பதனால் ............................... பிராணிகளின் வருகை அதிகரிக்கும்.

x) பொலித்தீனில் அடைக்கப்பட்ட உணவு ............................ ஆகும். (1 x 10 = 10 புள்ளிகள்)

**07. பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் () எனவும் பிழையாயின் () எனவும் அடையாளமிடுக.**

i) தாவரங்கள் வளர்க்க எமக்குப் பொருத்தமான இடம் வீட்டுத் தோட்டம் ஆகும். (    )

ii) இரவு முழுவதும் நீரில் ஊறவைத்து மறுநாள் நடக்கூடிய பயிர் கத்தரியாகும். (    )

iii) செம்பகம் மண்ணைத் தூர்வையாக்கக்கூடியது. (    )

iv) உணவு நசுங்குதல் மூலம் உணவின் பண்புத்தரம் கெட்டுப்போகின்றது. (    )

v) தேசிக்காயை உலர்ந்த மண்ணினுள் புதைத்து வைத்தல் பாதுகாப்பானது. (    )

(1 x 5 = 05 புள்ளிகள்)

**08. பின்வரும் 'A' தொகுதியில் காணப்படும் சொற்களை 'B' தொகுதியில் காணப்படும் பொருத்தமான சொல்லுடன் இணைக்குக.**

| | **தொகுதி 'A'** | **தொகுதி 'B'** |
|---|---|---|
| i) | உயர்ந்த மரங்களில் வாழும் பிராணி | வெட்டுப்படல் மூலம் |
| ii) | அரிசியில் காணப்படும் பிரதான போசணை | சோற்றுடுப்பு |
| iii) | கண்ணாடிப் போத்தல்களில் அடைக்கப்படும் உணவு | ஆந்தை |
| iv) | சமையலறை உபகரணம் | காபோவைதரேற்று |
| v) | உணவின் பண்புத்தரம் கெட்டுப்போகக் காரணம் | பழச்சாறு |

(1 x 5 = 05 புள்ளிகள்)



Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk